# நெசவாளர்கள் துயர்

# தீரவில்லை

## கிளர்ச்சி நாடெங்கும் பாவுகிறது

—————(o)—————

## சென்னையிலும் நெசவாளர் மறியல் நடைபெறும்

...............(ஃ)...............

### இடைப்பாடியில் உண்ணாவிரதம்?

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை முக்காலணா இலங்கை 8 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 13—2—51 | மணி 71

சென்னை, பிப். 13—

நெசவாளர்களுக்கு இன்னும் நூல் சரிவரக் கொடுபடவில்லை. நூல் கோட்டாவை அதிகரிக்காவிட்டால், அவர்களுடைய துயரம் சற்றும் நீங்காது. எனவே, சென்னை நகருக்குச் சப்ளை செய்யும் நூல் கோட்டாவை விரைவில் அதிகமாக்காவிட்டால், சென்னைக் கலெக்டர் அலுவலகத்துக்கு முன்னாலும், பொருள் கட்டுப்பாடு டைரெக்டர் அலுவலகத்துக்கு முன்னாலும் சாத்வீக மறியல் நடத்துவதென்று சைதாப்பேட்டை நெசவாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இடைப்பாடியில் நெசவாளர்களின்குறை நீக்கப்படும்வரையில் தோழர்கள் ஆர். எஸ். நாராயணன், இ. பொன்னுச்சாமி ஆகியோர் 15-ந் தேதி முதல் மறியலும், உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

காஞ்சீபுரம் நெசவாளர்களின் குறைகள் இதுவரை கவனிக்கப்படாமலும், தீர்க்கப்படாமலும் இருக்கிறபடியால், உடனே பஞ்சப்படி, கஞ்சித்தொட்டி முதலிய வசதிகளைச்செய்து தரவேண்டுமென்றும், இல்லையென்றால், காஞ்சீபுரம் தாலுக்கா தாசில்தார் அலுவலகத்தின் முன்னால் நெசவாளர் அமைதியாக மறியல்போர் நடத்துவதென்று முடிவு செய்துள்ளனர்.

கைத்தறி நெசவாளர்களின் துயரங்களை அரசாங்கம் இதுவரையில் விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைத்த கோட்டா நூலும் நெசவாளர்களிடம் சரிவர வந்து சேரவில்லை.

சேலம் மாவட்டத்திலே நெசவாளர்கள் படும் தொல்லையை நீக்க இன்னும் வழி செய்யப்படவில்லை. வாரத்தில் தறிக்கு 2-8-0 ரூபாய் கொடுத்து விடுவதன் மூலம் பட்டினிச்சாவைத் தவிர்த்துவிட முடியும் என்று எவரும் கூறமுடியாது.

மற்றவிடங்களிலுள்ள நெசவுத் தொழிலாளர்களோ அடியோடு கவனிக்கப்படவேயில்லை; இந்நிலையில் சேலம், திருச்செங்கோடு, திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய விடங்களில் நெசவாளர் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. காஞ்சீபுரம், நெல்லூர், மதுரை, இடைப்பாடி, சென்னை, ஆகிய விடங்களில் இவ்வாரத்தில் கிளர்ச்சி தொடங்குவதென்று முடிவு செய்திருக்கின்றனர்

இந்நிலையில் சென்னை அரசாங்கம் இறிது தைரியத்தை வரவழைத்து கொண்டாவது மத்திய அரசாங்க எஜமான்களிடம், நம் நாட்டு நெசவாளர்களுக்குத் தேவையான அளவு நூலை வாங்கிக்கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும்.

பாக்கிஸ்தானுடன் அண்மையில் இந்திய அரசாங்கம் வணிக ஒப்பந்தம்செய்துகொண்டிருக்கிறபடியால் இனிமேல் பாகிஸ்தானிலிருந்து பருத்தி தாராளமாகக் கிடைக்கும் என்று அவ்வொப்பந்தத்தின் மூலம் அறியக் கிடப்பதால் சென்னை அமைச்சர்கள் இங்கே எதிர்க்கட்சிகளிடம்காட்டும் கைத்திறங்களைமத்திய அரசாங்கத்து அமைச்சர்களிடம் காட்டியாவது, நமக்கு வேண்டியநூல்களைப் பெற்று வந்து நம் நாட்டு ஏழை நெசவுத் தொழிலாளர்களுடைய பட்டினித் தொல்லையைப் போக்க முனைய வேண்டுகிறோம்.

———

### காட்டுமிராண்டித்தனம்

திருமங்கலம், பிப். 8:—

இவ்வூர் தி. மு. க. செயற்குழு கூடி மத்தியசர்க்கார் மந்திரி முன்ஷி அவர்கள் வந்தபோது கருப்புக் கொடி காட்டியத் தோழர்கள் மீது சர்க்கார் காட்டு மிராண்டித்தனமாகத்தடியடிப் பிரயோகம் செய்ததை வன்மையாகக் கண்டித்தும், இந்நகர் தி. மு. க. சார்பில் "பகுத்தறிவு இளைஞர் படிப்பகம்" திறக்கவும் தீர்மானித்தது.

# வழக்காடி நம் உரிமையை நிலைநாட்ட வேண்டும்

..............................

## திராவிட இயக்க தோழர்களை அரசியல் கைதிகளாக மதிப்பதில்லை!

—————(:0:)—————

### சென்னை போலீஸ் போக்குக் கண்டன

..............................

### சென்னை மாவட்ட தி. மு. கழக தீர்மான

சென்னை, பிப். 12—

நேற்று மாலை 3 மணிக்கு தங்கசாலை, 202-ம் எண் கழகக் கட்டிடத்தில் மேற்படி நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டக்கிளைக்கழகப் பிரதிநிதிகள் பலர்வந்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் அண்மையில் சென்னை வந்த வடநாட்டு மந்திரி முன்ஷி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டி சிறை சென்ற தோழர்களைப் பாராட்டியும், தடை மீறி பொதுக் கூட்டத்திற்கு, முறையே தலைமை வகித்தும், சொற்பொழிவாற்றியும் பொதுக் கூட்டத்தை நடத்திய தோழர்கள் கா. அப்பாத்துரை, என். ஜீவரத்தினம் ஆகியோரது தீரத்தை மெச்சியும், பல தோழர்கள் பேசிய பிறகு கோவில்பட்டி தீர்மானம், கழகத் தோழர்கள் மீதுள்ள வழக்குகள், ஆகியவைகள் குறித்து உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை விளக்கினர்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

1. சென்னை வந்திருந்த உணவு மந்திரி தோழர் கே. எம். முன்ஷி அவர்களுக்கு அமைதியான முறையில் அரசியல் சட்டப்படியுள்ள மனித உரிமைக்கேற்ப கருப்புக் கொடி பிடித்த காரணமாகக் கைது செய்யப்பட்டுள்ள தோழர்களின் வழக்கை உயர்நீதி மன்றம்வரையில் வழக்காடி நம் உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

2. 1-2-51 ல் வடநாட்டு சர்க்கார் உணவு மந்திரி தோழர் முன்ஷி வருகையின்போது அமைதியான முறையில் போக்குவரத்திற்கு சற்றும் இடைஞ்சலின்றி கருப்புகொடி பிடித்துக் கடமையை ஆற்றிய தி. மு. கழகத் தோழர்களையும், பொது மக்களையும் காட்டுமிராண்டித்தனமாகத்தடிகொண்டு தாக்கி, மக்களது சாதாரண உரிமையையும் பறிக்கும் முறையில் அடக்குமுறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட போலீஸ் அதிகாரிகளின் அதிக்கிரமத்தை இக்கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

3. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை, பொதுவாக திராவிட இயக்கத்தவர்களை, தங்கள் இயக்கக் கொள்கைக்கேற்ப கடமையை ஆற்றி கைது செய்யப்படுபவர்களை சர்க்கார் அரசியல் கைதிகளாக சிறையில் நடத்தவேண்டுமென்பதுடன் தற்சமயம் சிறைகளில் இயக்கத் தோழர்களுக்கு உண்டாக்கப்பட்டு வரும் கொடுமைகளை சென்னை அரசியலார் உடனடியாக களைந்து ஆவன செய்ய வேண்டுமென்று இக்கமிட்டி வற்புறுத்துகிறது.

4. திராவிட முன்னேற்ற கழக முதல் மாகாண மாநாட்டை சென்னை நகரில் நடத்த அனுமதி தர வேண்டுமென சென்னையாகாண திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழுவையும், பொதுச் செயலாளரையும் இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்கண்ட நான்கு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறின பின் செயலாளர் நன்றிகூறலுடன் கூட்டம் மாலை 6 மணிக்கு இனிது முடிவுற்றது.

மாலைமணி

சென்னை 13—2—51 செவ்வாய்க்கிழமை

# திரைமறைவில் சதி

மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தை ஒருதலைப்பட்சமாக நடத்துவதையும், சுரண்டிச் செல்ல முயல்வதையும, உணவு, உடை முதலியவற்றில் நம்மக்களின் நலத்தை அசட்டை செய்து நடந்துகொள்வதையும் கண்டிப்பதற்கறிகுறியாகவும், மத்திய அரசாங்கத்துடன் இவ்வாறு இணைந்து, நம் உரிமைகளைப் பறிகொடுத்து அடிமை வாழ்வு வாழ முடியாதென்பதை எடுத்துக்காட்டுவதற்கறிகுறியாகவும் தமிழகத்துக்கு வரும் மத்திய அரசாங்க அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் கோயில்பட்டியில் தீர்மானம் செய்திருந்தது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

அதன்படியே, மத்திய அரசாங்க அமைச்சர்களாகிய தோழர் திவாகர், ஹரிகிருஷ்ண மேதாப், முன்ஷி, இராஜகோபாலாச்சாரி முதலியவர்கள் இங்கு வந்தபோது அவர்களுக்கெல்லாம் சென்னையிலும் தமிழ்நாடெங்கும் கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன.

கறுப்புக்கொடி காட்டுவதன் மூலம் தங்கள் வெறுப்பைக் காட்டிக்கொள்ள மக்களுக்கு உரிமையிருக்கிறதென்றும், கறுப்புக்கொடி காட்டுவது எந்த வகையிலும் சட்ட விரோதமான செயலாகாதென்றும் இந்திய அரசியல் நிர்ணய சபை உற்பத்தி செய்த சட்டமும் கூறுகிறது.

ஆனால், இங்கு, கொடுங்கோன்மையினும் கொடுமை பொருந்திய செயலாக இருக்கிறது என்று பொதுமக்கள் பேசிக் கொள்ளும் அளவுக்குப் போலீஸ் நடவடிக்கைகள் நடந்திருக்கின்றன.

மத்திய அரசாங்க அமைச்சர்கள் தமிழகத்தில் சுற்றியபோது பலவிடங்களிலும் கறுப்புக்கொடிகள் காட்டப்பட்டன. தஞ்சாவூரில், திருவையாற்றில், திருச்சியில், மதுரையில், கோயமுத்தூரில் வந்த மத்திய அரசாங்க அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடிகள் காட்டப்பட்டன. ஆனால் இந்தவிடங்களிலெல்லாம், கறுப்புக்கொடிகள் காட்டுவோருக்கு எந்தவிதமான சங்கடங்களும உண்டாக்கவில்லை. பொதுமக்களும் தொல்லைக்குள்ளாக்கப்படவில்லை. கறுப்புக்கொடி காட்டியவர்களும் மிக அமைதியாகத் தங்கள் பணியாற்றினர்கள். தோழர் இராஜகோபாலாச்சாரியார், மேதாப், திவாகர் முவலியவர்கள் கறுப்புக்கொடிக்காரர்கள் ஒழுங்காக நடந்து அமைதியை மிக அருமையான முறையில் நிலைநாட்டியதைப் பாராட்டிச் சென்றனர். போலீசாராலும் முடியாத அளவுக்குக் கழகத் தோழர்கள் அமைதிகாத்து, தங்கள் நோக்கம் வெற்றியடையுமாறு பணிபுரிந்திருந்ததைப் போலீஸ் அதிகாரிகளே நேரில் கண்டு பாராட்டியுள்ளனர்.

அதே அமைச்சர்கள் சென்னைக்கு வந்தபோது, சென்னையில் கறுப்புக்கொடி பிடிக்கப்பட்டது. ஆனால் சென்னை போலீசார் பேயாட்டம் ஆடி விபரீதமாக நடந்துகொண்டனர்.

மக்கள் போக்குவரததை நெடுந் தொலைவரை தடுத்துவைத்துவிட்டதுடன் எவரும கறுப்புக்கொடி காட்ட அனுமதிக்கப்படவேயில்லை மீறிக் கறுப்புக்கொடியை எவரேனும காட்டினல் தடியடி பிரயோகம். இவற்றிற்கெல்லாம் அஞ்சாமல் சென்று கறுப்புக்கொடி காட்டியவர்கள் மீது வழக்கு. அதுவும் எப்படி? கறுப்புக்கொடி காட்டியவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் ரிமாண்டில் வைப்பது, பின் வழககுத் தொடர்வது, தண்டிப்பது, சிறையில் தள்ளுவது, சிறையில் சகிக்க முடியாத மனவேதனை தரும் கொடுமைகளுக்குள்ளாக்குவது, அடிப்பது போன்ற கொடுமைகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

கறுப்புக்கொடி காட்டுபவர்கள் தான் இவ்வாறு நடத்தப்படுகின்றார்கள் என்றால், வேடிக்கைப்பார்த்து நிற்கும் பொதுமக்களைப் போலீசார் நடத்துவது சொற்களால் எடுத்துக் கூற முடியாத அளவு கொடுமையாகும.

பொதுமக்களைப் போலீசார் வேட்டை நாய்கள் பாய்ந்து பிடுங்க வருவதுபோலப் பாய்ந்து பாய்ந்து தடியால் அடிப்பதும், நடக்க முடியாத பெண்களையும், கிழவர்களையும், சிறுவர்களையுமகூட விடாமல் தடியால் அடிப்பதும், அடிப்பட்டுக் கீழே விழுந்துவிட்டாலும்கூட மேலும் மேலும அடிப்பதும், ஜீப் மோட்டார் வண்டிகளை கூட்டத்தை நோக்கி வேகமாக ஓட்டித் துரத்துவதும், குதிரைகளை விட்டுத் துரத்தவதுமாகப் போலீசார் செய்யும் கொரோச் செயல்கள் நாளுககு நாள பெருகிவிட்டன. மறியல் செய்தோ, கறுப்புக்கொடி காட்டியோ சிறைசெல்லும் கழகத் தோழர்கள் இலட்சியத்தை மனத்திற்கொண்டே சிறை செல்கின்றவராவர். திராவிட இயக்கத் தோழர்கள் என்பதறிந்தவுடன் இவர்கள் சிறையில் நடத்தப்படும் கொடுமை சொல்லுந்தரத்திலில்லை, வ. உ. சி. கூட வெள்ளையரால் நடத்தப்படாத முறையில் இன்றைய சிறையில் திராவிட இயக்கத்தோழர்கள் கொடுமைக்குள்ளாக்கப்படுகின்றனர் என்று அறியக் கிடக்கிறது திராவிட இயக்கத்தோழர்களுக்கும், குற்றம் புரிந்த கைதிகளுக்குமிடை சிறிதும் வேறுபாடு கிடையாது.

பொதுவாகச் சென்னையில் மட்டும் இவ்வாறு நடைபெறவும், தமிழகத்தின் பிற பாகங்களில் ஒழுங்கான முறையில் நடைபெறவுமான வேறுபாடான முறை கையாளப்படுவதன் மர்மமென்ன? கறுப்புக்கொடி காட்டுவது மக்களுரிமை என்றும் அதைத் தடைசெய்தல் கூடாதென்றும் மத்திய அரசாங்க மந்திரி ஹரிகிருஷ்ண மேதாப் கூறிச் சென்றிருந்தும், இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் தெளிவுபட இவ்வுரிமையை வற்புறுத்தியும், சென்னைப் போலீசார் இவ்வாறு நடப்பதற்குக் காரணம் என்ன? சிறையில் இத்தகைய கொடுமை நடப்பதற்குக் காரணம் என்ன? சென்னை நகரப் போலீசாரே தங்கள் விருப்பப்படி இவ்வாறு செய்து விடுகின்றனரா? ஆமென்றால், போலீஸ் அமைச்சர் உடனடியாகப் போலீஸ் கமிஷனர் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமல்லவா? போலீசார் கட்சி வெறியர்களாக மாறிவிட்டார்களா? கட்சிப் பித்தம் கொண்டு மாற்றுக் கட்சியாரை இம்சிக்கும் வேலையில் தாங்களாகவே இறங்கிவிட்டனரா? இல்லை மேலிடத்துக் கட்டளையா? எனவே திரைமறைவில் ஏதோ சூழ்ச்சி நடக்கிறதென்றும், சென்னை அமைச்சர்கள், எவராலோ நெருக்கப்பட்டு, நெருக்குபவர்களைச் சமாளிக்கும் ஆண்மையின்றி, அவர்கள் விருப்பப்படி ஆடும் கைப்பதுமைகளாக இருக்கின்றனரென்றும் அப்படி அமைச்சர்களைக் கைப்பதுமைகளாக ஆட்டிப் படைக்கும் சதிச் செயல் மேலினத்தாராலும் மேலிடத்தாராலும் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் கூறினால், அதை மறுக்க முடியுமா? மேலின, மேலிட சூழ்ச்சியால்தான் சென்னையில் போலீஸ் வேட்டை காயாக்கப்பட்டது என்பது தவறாக இருக்க முடியுமா?

பொதுமக்கள் ஆட்சிதான் இப்போது நடைபெறுகிறது என்று கூறிக்கொண்டு பொதுமக்களை ஆடுமாடுகளைப்போல் விரட்டி விரட்டியடிப்பது எந்தவகையில் குடியாட்சிச் செயல்? இப்படி நடப்பது குடியாட்சியா? அல்லது முசோலினி-ஹிட்லர் ஆட்சியா? என்று கேட்கின்றோம்.

பொதுமக்களை இவ்வாறு கொடுமைப்படுத்துவது வலுத்தால், நிலைமை என்னாகும் என்பது காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் வரலாறு படித்தவர்களாக இருக்கமுடியாதாகையால் தெரிந்துகொள்ளவில்லையென்றாலும், திரைமறைவில் சதிசெய்யும் சூழ்ச்சிக்காரர்களாவது அறிந்துதானிருக்கவேண்டும். உலக வரலாற்று நிகழ்ச்சிகள் சூழ்ச்சிக்காரர்கள் அறிவுக்கண்களைத் திறக்குமாக. பொதுமக்கள் எப்போதும் ஜீப்பைக்கண்டு, குதிரையைக்கண்டு, குறுந்தடியைக்கண்டு ஓடிக்கொண்டேயிருப்பார்கள் என்னும் மயக்கம் அவர்கள் மூளையிலிருந்து அகலுமாக.

# மஞ்சூரியாவில் 3 லக்ஷம் ரஷ்ய துருப்புகள்

—o—

## சீனவிற்கு அதிக பீரங்கிகள்—டாங்கிகள்

—(:0:)—

## ஒரு லக்ஷம், ஜப்பானியக் கைதிகளுக்கும் மங்கோலியர்களுக்கும் ராணுவ பயிற்சி

வாஷிங்டன், பிப். 12—

ரஷ்யா-சீனவுடன் ஒரு புதிய ராணுவ உதவி ஒப்பந்தம் செய்திருப்பதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் மஞ்சூரியாவில் சுமார் 3,00,000 ரஷ்ய துருப்புகளை வைப்பதுடன், சீனவிற்குத்தேவையான "ஜெட்" விமானங்கள் சப்ளை செய்வதுடன், 1000 சீனர்களுக்கு விமானம் ஓட்டும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான "பாரசூட் துருப்புகளுக்கு" பயிற்சி அளிக்க ரஷ்யா சம்மதித்திருப்பதாகக்கூறப்படுகிறது.

சீனவிற்கு அதிக டாங்கிகள், பீரங்கிகள், வண்டிகள் முதலியவைகள் கொடுப்பதற்கு ரஷ்யா அங்கீகரித்திருப்பதாயும், சுமார் 100000 ஜப்பானிய போர் கைதிகளுக்கும் இதே தொகை கொண்ட மங்கோலியர்களுக்கும் காலற்படை ஒன்று உண்டாக்குவதற்கு வேண்டிய பயிற்சிகளும் ரஷ்யா கொடுப்பதாக ஒப்பந்தம் செய்திருப்பதாயும் கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தம் ஒரு மாதத்திற்கு முன்பே செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## அடக்குமுறை ஒழிக

### அச்சுத் தொழிலாளர் சங்கத் தீர்மானம்

திருச்சி, பிப். 2—

2-2-51 ல் நடைபெற்ற அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

மத்திய சர்க்கார் கொண்டுவந்திருக்கும் தொழிலாளர் உறவு மசோதா, தொழிற் சங்க மசோதா என்ற இருமசோதாக்களும் தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பாதகமாகத் தொழிற் சங்க இயக்கத்தை நசுக்கும் தன்மையில் அமைந்திருப்பதாலும், தொழிலாளர் தலைவர்கள் அனைவரையும் சிறையிலடைத்தும், தொழிலாளர்களின் பிரதிநிதித்துவமும், உண்மையான தொழிலாளர் தலைவர்களின் ஆலோசனையும் இன்றி, ஷை இரு மசோதாக்களையும் பார்லிமெண்டில் நிறைவேற்ற முயற்சிக்கும் மத்திய சர்க்கார் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக ஷை இரு மசோதாக்களையும் வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு மத்திய சர்க்காரை இக்கூட்டம் கோருகிறது.

மத்திய சர்க்கார் மந்திரி மேதாபுக்குக் கருப்புக்கொடி காட்டியதற்காக, சங்கத் தலைவர் எம். எஸ். மணி அவர்களைக் கைது செய்ததையும், அமைதியாக நின்று கொண்டிருந்த பொது மக்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்ததையும், ஜனநாயக முறைக்கு மாறுபட்ட செயல் என்ற முறையில் சர்க்காரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாடு அச்சுக்கூடத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர் சி. எம். ஆறுமுகம் அவர்களை விசாரணை இன்றிச் சிறையில்வைத்திருப்பது கூடாது எனவும், விசாரணை செய்து நீதி வழங்க வேண்டுமெனவும், அல்லது உடனடியாக அவரை விடுதலை செய்யவேண்டுமெனவும் சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேறியதும் இரவு 9-45 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

## விருப்பம் வெறுக்கப்பட்டது

பாரதி தேசிய வாலிபர் சங்கம், ஸ்ரீமாகாளியம்மன் கோயில் தெரு பிள்ளையார்பாளையம் காஞ்சிபுரம். ச. சுப்பிரமணியன் எழுதுவதாவது:—

நான் மேற்படி சங்கத்தில் காரியதரிசியாக இதுவரை பணியாற்றி வந்தேன். தற்பொழுது அதில் பணியாற்ற எனக்கு விருப்பமில்லை சங்கத்தினர்களிடம் என் விருப்பத்தை தெரிவித்தும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆதலால் நான் மேற்படி சங்கத்திலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினனாக சேர்ந்துவிட்டேன். என்பதை தங்கள் பத்திரிகை மூலம் மேற்படி சங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

# சிறைபட்ட மாவீரர்கள்



என். வி. நடராசன்
(மாகாண அமைப்பாளர்)



வி. முனுசாமி
(நகரசபை உருப்பினர் தி.மு.க. வீரர்)



கே. கோவிந்தசாமி
(சென்னை மாவட்ட செயலாளர்)

முன்ஷி வருகையின்போது கருப்புக் கொடி பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதியானவர்கள். இவர்கள் வழக்கு 22—2—51 விசாரணைக்கு வருகிறது.

# சென்னை-சேலம் மாவட்ட கைத்தறி நெசவாளரும் மறியல் செய்வர்!

……………(0)……………

## 8000 தறிக்கு 67 பேல் நூலா?

சென்னை, சைதாப்பேட்டை நூல் அட்வைசரி கமிட்டித் தலைவர் எம். கன்னியப்பன் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் 8-2-51 ல் கூடிய கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை நகரில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நிலை நாளுக்கு நாள் சீர்கெட்டு வருவதாலும், போதிய நூல் சப்ளை செய்ய சர்க்கார் யாதொரு ஏற்பாடு செய்யாததாலும் அநேக குடும்பங்கள் குழந்தைகளுடன் பட்டினியாய் வாடுகின்றனர். ஜனவரிமாதம் நூல் ஒதுக்கம் 15,000 பேல்களில் 67 பேல் மாத்திரம் சென்னையிலுள்ள 8000-க்கு மேற்பட்ட தறிகளுக்கு அலாட்மெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. இது 3 நாட்கள் வேலைக்குக் கூட காணாத நிலையில் இருக்கிறது இந்த சீர்கேடான நிலையை சர்க்கார் உடனடியாக உணர்ந்து சென்னைக்கு நூல் அதிகப்படி ஒதுக்கப்படாவிட்டால் சென்னையிலுள்ள எல்லா தரிகாரர்களைக் கொண்டு தோழர் எம். கன்னியப்பன் எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் கமிட்டி மெம்பர்கள் உள்பட சென்னை கலெக்டர் ஆபீஸ் முன்னும், டைரக்டர் ஆப் கண்ட்ரோல் கமோடிட்டீஸ் ஆபீஸ் முன்னும் அமைதியான முறையில் சத்தியாக்ரகம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள நெசவாளர்களுக்கு நெசவு தொழிலைத் தவிர வேறு தொழில் இல்லாததால் மற்ற இடங்களில ரொக்க நிவாரணம் அளிப்பதுபோல் சென்னை நெசவுத்தொழிலாளர்களுக்கும் உடனே நிவாரணம் அளிக்க சென்னை சர்க்காரை கேட்டுக்கொள்கிறது. இதற்காக சென்னை பிரதம மந்திரி கனம் பி. எஸ். குமாரசாமிராஜாவையும், தொழில் மந்திரி கனம் சி. பெருமாள்ரெட்டியையும் காண சென்னை அட்வைஸ்ரி கமிட்டி மெம்பர்கள் உள்பட தூதுக்குழு செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### சேலம் மாவட்ட நெசவாளர் மறியல்!

4, 5-2-51 ல் சேலம் கைத்தறி-ஜமக்காளம் நெசவுத் தொழிலாளரின் ஐக்கிய சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் சம்மேளனப் பொதுக் காரியதரிசி கே. எஸ். பார்த்தசாரதி தலைமையில் கூடியது. அதுபோது சேலம் நெசவாளருக்குக் கொடுக்கும் பஞ்சப்படியைப் போன்று சேலம் மாவட்டத்திலுள்ள எல்லா கைத்தறி நெசவாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும், அப்படி கொடுக்காவிட்டால் சேலம் மாவட்டத்திலுள்ள நெசவாளர்கள் ஆங்காங்கே உள்ள தாசில்தார் பணி மனைக்கு முன் மறியல்செய்யவேண்டுமென்றும், அதற்காக 9 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

வேலூர், பிப் 2:—

வேலூர்(வ. ஆ) நகர தி. மு. க. செயற்குழு கூட்டம் 4-2-51ல் கூடியபோது, செயலாளர் எஸ். கன்னியப்பன் தேர்ந்தெடுக்கப் பட்டதும், வேலூர் நகர தி. மு. கழகத்துக்கு நகரிலுள்ள மற்ற கிளைக் கழகங்கள் கட்டுப்பட்டு நடக்க வேணுமாய்த் தீர்மானித்தது.

### முன்ஷிக்கு கருப்புக்கொடி காட்டியவர்கள் மீதுள்ள வழக்கு

1-2-51ல் சென்னை வந்த கனம் உணவு மந்திரி கே. எம். முன்ஷிக்கு தி. மு. கழக தோழர்கள் கருப்புக் கொடி பிடித்தகாரணத்தால் தோழர் வி. முனுசாமி உள்ளிட்ட 11 தோழர்கள் மீதுசென்னை போலீஸ் ஆக்ட், 75, 41A. செக்ஷன்படி குற்றம் சாட்டி அவர்களை சிறை பிடித்தனர். 2-2-51 அன்று சென்னை எழும்பூர் மாகாணமாஜிஸ்திரேட் கோர்ட்டில், மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்து, வழக்கைமாஜிஸ்திரேட்மறுதேதிக்கு மாற்றும்போது தோழர்கள் என். வி. நடராஜன், கே. கோவிந்தசாமி, வி. முனிசாமி, ஆர். ரத்தினம்ஆகிய நால்வருக்கும் தனித்தனியே, தலா நூறுரூபாய்க்கு சொந்த ஜாமீனும், நூறுரூபாய்க்கு தனிநபர் ஜாமீனும் ஆக நபர் ஒன்றுக்கு இரு ஜாமீன்கள் கோறி விடுதலை செய்வதாகக் கூறினர் தோழர்கள் நால்வரும் தனிநபர் ஜாமீன் கொடுக்க மறுத்ததால் அவர்கள் 10-2-51வரை ரிமாண்டில் வைக்கப்பட்டனர். 10-2-51ல் மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்து, சிறிது விவாதத்திற்குப் பிறகு மாஜிஸ்ட்ரேட் வழக்கை 22-2-51 க்கு மாற்றிய போது மேற்கண்ட நான்கு தோழர்களையும் சொந்த ஜாமீனில் போக அனுமதித்ததின் பேரில் தோழர்கள் நால்வரும் அதன்படியே வெளி வந்தனர். இச்செய்தியை சில செய்தித்தாள்கள் கருத்தைத் திருத்தி பிரசுரித்துள்ளது தவரான செய்கையாகும்.


### ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் தேவை.

கோயம்புத்தூர்
நாகை
கும்பகோணம்

'மானேஜர்'

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தைத் தடுக்க
**கர்ப்பதடைக்கு**
விஞ்சானமுறைப்படி தயாரிக்கப்பட்ட
மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண், பெண், கையாள்வது
செட்டு விலை ரு 2/8 தபால்சிலவுதனி
31, BEAT MULLER & Co. G. T. MADRAS 1

## தி. மு. கழக நடவடிக்கைகள்

ஆய்க்கவுண்டர்பாளையம்:—தி. மு. க. செயற்குழுகூடி ஆண்டு விழாவை அண்ணா, நெடுஞ்செழியன் இவர்களில் ஒருவரைக்கொண்டு நடத்துவதெனவும், கழகத் தோழர்களை மிருகத்தனமாக அடித்ததற்குக்கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

திருப்பூர்:—தி. மு. க. செயற்குழு கூடிப் பொதுச்செயலாளர் சிந்தனைச் செல்வனைத் தேர்ந்தெடுத்தனர்.

* * *

நாகை:—அவுரித்திடலில் 14-1-51 ஞாயிறு மாலை 6 மணிக்கு முதலாவது ஆண்டுவிழா தோழர் வேலு தலைமையில் நடைபெற்றது. ஈ. எம். அனிபா, சென்னை இரா. சண்முகம் இயக்கப் பாடல்பாடிய பின்னர் மு. கருணாநிதி உணர்ச்சிமிக்க 1½ மணி நேரம் பேசினார். கூட்டத்தின் இறுதியில் செயலாளர் கா தர்மலிங்கம் அறிக்கை வாசித்து, நன்றி நவில இரவு 9 மணிக்கு இனிது முடிவுற்றது.

* * *

மதுரை:—ஓழமாசி வீதி அழகிரி படிப்பகச் செயற்குழு கூடி, மேதாப்புக்குக் கருப்புக்கொடி காட்டி சிறை சென்றதற்குப் பாராட்டுக் கூட்டம் 18-2.51 ல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

* * *

ரேப்பாளையம்: 24-12.50 ல் தி. மு. க. கிளை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது பத்தாண்டுக்கு மா. கண்ணையன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

பொள்ளாச்சி:—5-2-51ல் தி. மு வாலிபர் கழக உறுப்பினர் தேர்தல் நடைபெற்றபோது புத்தாண்டுக்கு கோ. கோபால் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

புதுப்பாளையம்:—24-12.50ல் தி. மு. க. செயற்குழு கூடி புத்தாண்டுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இருசப்பன் இவ்வாண்டுக்குச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

ஆப்பூர்:—24—12 50ல் தி. மு. க. கிளை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது புத்தாண்டுக்கு டேவிட் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

* * *

மாயூரம்: 16.1-51ல் மாயூரக்கூறைநாடு குயவன் தெருவில் வேலாயுதம் படிப்பகம் திறப்பு விழா தோழர் மாணிக்கம் தலைமையில் நடந்தது.

* * *

கருகம்புத்தூர்: 8.2-51ல் தி. மு. க செயற்குழு கூடியது. அதுபோது, ஏ. கருத்தோவியம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஆசிரியருக்கு முடங்கல்

## கருணை காட்டுங்கள்

—

### கார்ப்பரேஷன் கமிஷனருக்கு

சுமார் 50 ஆண்டுகளாய், தெருத் தெருவாய் சுற்றி வியாபாரஞ் செய்து வாங்கி வரும் பழைய துணிகள், உடைந்த சாமான்கள், புட்டிகளை பீப்பிள்ஸ் பார்க் கோழி கடைக்குப் பின்புறம் விற்பனை செய்து, அதில் வரும் ஊதியமே எங்கள் குழந்தை குட்டிகளைக் கால் வயிறு கஞ்சியோடு ஜீவிக்கச் செய்து வந்தது. மூன்று ஆண்டிற்கு முன் அங்கு வியாபாரஞ் செய்யக்கூடாது என்று துரத்தினார்கள். பிறகு நாங்கள் வேண்டிக் கொண்டதற்கு அனுமதித்தார்கள். மீண்டும் ஒரு வருடத்திற்குப் பிறகு துரத்தினார்கள், நாங்கள் மன்றாடினோம்—அனுமதித்தார்கள். மீண்டும் சில மாதங் கழித்துத் துரத்தினார்கள். நாங்கள் மன்றாடினோம், எனவே, நாள் ஒன்றுக்கு மாலை நான்கு மணி முதல் 7 மணி வரை ஆள் ஒன்றுக்கு 6 அணா வாடகை வாங்கிக்கொண்டு வியாபாரஞ் செய்ய அனுமதித்தார்கள். அதற்கு அத்தாட்சியாக ரசீது எங்களிடம் இருக்கிறது. தற்சமயம் 5-2-51 முதல் அங்கிருந்து எங்களை துரத்திவிட்டார்கள், எங்கள் கதி என்னவது?

நாங்கள் மாலை ½ மணி முதல் 7 மணிவரை, வெட்ட வெளி மண் தரையில் வியாபாரம் செய்வோம். இதனால் யாருக்கும் எவ்விதமான இடைஞ்சலோ, நட்டமோ கிடையாது. நாங்களும் சுமார் 50 ஆண்டுகளாக இதனையே நம்பி ஜீவித்து வந்துள்ளோம் வட இந்தியருக்கு அகதிகள் என்ற பெயரால் அளிக்கும் சலுகைகூட எங்களுக்கு இல்லையென்றால் நாங்கள் எப்படித்தான் வாழ்வது. வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ள இக்காலத்தில் நாங்களும் இத்தொழிலை விட்டுவிட்டு, வேலைக்காக சர்க்காரை தொந்தரவு செய்து கொண்டிருந்தால் வீண் தொல்லைதானே. நாங்கள் இத்தொழிலை விட்டால், கள்ளச் சாராயம் விற்பனை செய்துதான் ஜீவிக்க வேண்டும். அதில் துன்பம் வந்தாலும் அனுபவிக்க வேண்டியதுதான். எனவே நீதிக்குக் கட்டுப்பட்டு, சட்டத்திற்கு மதிப்பு தந்து, உண்மைக்கு உழைத்து, உடல் வலியும் கவனியாது—மாடென உழைக்கும் உழைப்பாளிகளுக்கு வியாபாரஞ் செய்ய, ஒரு துண்டு இடம் தரமுடியாதபோது, உல்லாச வாழ்க்கைக்கு ஸ்டேடியம் ஏன்-ரேடியோவுடன் பூந்தோட்டமேன்-பணக்காரர்களின் பொழுது போக்குக்கு எஸ். ஐ. ஏ. ஏ. கிளப்பும் மைதானமுமேன் என்றுதான் கேட்கிறோம்? எனவே கருணை கூர்ந்து பீப்பில்ஸ் பார்க்கில் குளக்கரை ஓரம் அல்லது கார்ப்பரேஷனுக்கு பின்புறம் வெட்டி மைதானம் எஸ். ஐ. ஏ. ஏ. கிளப்பிற்குப் பின்னால் ஒரு துண்டு ஏதாகிலும் ஒன்று 200+200 துண்டு கொடுத்தால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

கே. ஆரிய சங்காரன்,
(செயலாளர்: ஆக்கர்ஸ் அசோசேஷன் சென்னை—3)

தஞ்சை மாவட்ட

# தி. மு. கழக

# முதல் மாநாடு

மாயவரம்

இடம்: கூறைநாடு மாயவரம் சி. நடராசன் பந்தல்

**1951 மார்ச் 3, 4 சனி, ஞாயிறு நாட்களில்**

தலைவர்:

**சென்னை தோழர் N. ஜீவரத்தினம்**

(கார்ப்பொரேஷன் கவுன்சிலர்)

துவக்குபவர்:

**தோழர் காஞ்சி கலியாணசுந்திரம்**

வரவேற்புக்குழு தலைவர்:

**K. K. நீலமேகம்**

மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் அறிஞர்

**C. N. அண்ணாத்துரை M. A.**

அவர்களும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இசைவாணர்கள்:

**நாகூர் தோழர் அனீபா**

**மாயவரம் தோழர் ராமசாமி**

நடிப்புப்புலவர்: **K. R. ராமசாமி**

பொதுச்செயலாளர்: **C. N. அண்ணாத்துரை**

பங்கேற்று நடிக்கும் நாடகங்கள்

**"சந்திரமோகன்"**

சனி இரவு

**"நீதிதேவன் மயக்கம்"**

ஞாயிறு இரவு

செயலாளர்கள்:
வி. பராங்குசம்
ஆர். பழனிச்சாமி

தொண்டர்படைத் தலைவர்கள்:
ஆர். முத்துக்குமாரசாமி
ஆர். ஜோசப்

விளம்பர உறுப்பினர்:
வை. மாணிக்கம்

★

பெண்களுக்குத் தனி இடமுண்டு

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street Madras-1.